# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**
**காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

**மயிலாடுதுறை**
**நாள்: 15.10.2019**

**தனி அலுவலர் / ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **18.10.2019** | **1)**மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட துலா கட்டத்தில் ஐப்பசி மாதம் 2019ம் ஆண்யடிற்கு துலா உற்சவ விழாவிற்கு பார்க்அவென்யூ சாலையின் தென்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக விழா கடைகள் 50 நாட்களுக்கு மட்டும் (11.11.2019 முதல் 30.12.2019 வரை) அமைத்தல் கொள்ளும் உரிமைக்கு 16.10.2019 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | **தீர்மானம் எண். 642**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | 50 நாட்களுக்குரிய தற்காலிக விழா கடைகள் அமைத்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | R.சற்குருநாதன்,<br>25, வடக்கு வீதி,<br>திருவிழந்தூா் , மயிலாடுதுறை | ரூ.2,62,005/– |
| 2. | D.செந்தில்,<br>25E, அண்ணாவீதி,<br>கூறைநாடு, மயிலாடுதுறை | ரூ.3,42,015/– |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகளின் மீது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.D.செந்தில், 25E, அண்ணாவீதி, கூறைநாடு, மயிலாடுதுறை என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ.10008/– மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.22,411/– கூடுதலாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண்.3891/2019/அ2 | |

<table>
<tr>
<td>18.10.2019</td>
<td>
2) இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 270வது பிரிவின்கீழ் வசூல் செய்யும் உரிம இனமாக தெருவோர வியாபரிகள் மற்றும் வண்டிகளில் வைத்து பாதையோரங்களில் வியாபராரம் செய்பவர்களுக்கு (தரைகடை வசூல்) வசூல் உரிமத்திற்கு 17.10.2019 அன்று மறுஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி 12வது முறையாக நடைபெற்றதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்ட விபரப்படி இரண்டு நபர்கள் கொடுத்துள்ளனர்.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர்/முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு.அ.காமேஷ், த/பெ.அச்சுதராஜ்,<br>2/70, நேருஜி தெரு, சீனிவாசபுரம்<br>மயிலாடுதுறை</td><td>ரூ.5,51,003/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எம்.காமராஜ், த/பெ.வி.மாணிக்கம்,<br>34/27, தருமபுரம் ரோடு,<br>மயிலாடுதுறை</td><td>ரூ.4,00,100/–</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு. அ. காமேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>
அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
2. மேற்கண்ட இனத்திற்கு பல ஆண்டு காலமாக ஏலம் விடப்படவில்லை. இதனை நடைமுறைப்படுத்த இந்நகர் மன்ற தீர்மான எண்.194/02.09.2016ன்படி கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்து அதன்மீது மாவட்ட அரசிதழில் (Gazette at Notification)11.02.2017ல் விளம்பரம் செய்யப்பட்டது. அதன்பிறகு மேற்படி கோப்பின்மீது நடைவடிக்கை எடுக்கப்பட்டு பலமுறை ஏலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏலம் போகாத நிலையில் அலுவலக ரீதியாக துறை மூலம் 24.05.2019 முதல் மேற்கண்ட இனத்திற்கு மூன்று நபர்களை பயன்படுத்தி தினசரி வசூல் செய்யப்பட்டு வரப்பெறுகிறது. மேலும் தரைகடைகள் நகரமைப்பு பிரிவு மூலம் கணக்கெடுப்பு செய்யததின் அடிப்படையில் இந்நகர் பகுதியில் தெருவோர வியாபாரிகள் தரைகடைகள் தள்ளுவண்டிகள் மொத்தம் 318ல் 214 கடைகள் மட்டுமே கண்டறியப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதையும் பருவமழை காலங்களில் தரைகடைகள் அதிகமாக செயல்படுவதில்லை என்பதனை கருத்தில் கொண்டும் மற்றும் கணக்கெடுப்பு கருத்தினை கொண்டு தினசரி தோராயமாக 214 கடைகளுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.30/– வீதம் கணக்கிடப்பட்டு. அதாவது ரூ.214 x 30 = 365 = 23,43,300/– எனவும், தற்காலம் அலுவலக வசூல் தொகையாக நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.4000/– வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் வழி ரூ.4000 x 365 = 1460000/–ல் ஆள் கூலி நாள் ஒன்றுக்கு 3 நபர்களுக்கு
</td>
<td>தீர்மானம் எண். 643<br><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ரூ.600வீதம் 3 x 600 வழிதொகை கணக்கீடு 600 x 3 = 1800 தினசரி<br><br>1800 x 365 = 657000/–<br>வருமான வரி 2% = 29200/–<br>GST 18% = 262800/– ரூ.949000/–<br>நிகரதொகை = 5,11,000/–<br><br>மேற்கண்ட அலுவலக மூலமாக வருமான<br>தொகை ஆண்டு ஒன்றுக்கு = ரூ.14,60000/–<br>வழி தொகையாக (கழித்தால்) = ரூ.949000/–<br>மீது நிகர தொகையான வருமானம் = ரூ.5,11,000/–<br><br>இதனை கணக்கில் கொண்டு 17,10,2019 அன்று கூடுதலாக கொடுத்துள்ள வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.அ.காமேஷ் என்பவரின் கூடுதலாக ரூ.5,51,003/– கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.5378/2016/அ2,** | |

| | | |
|---|---|---|
| **18.10.2019** | **3) 1.** உள்ளாட்சிகளில் விளம்பரங்களை முறைபடுத்துவதற்கான நடைமுறை (Outdoor Advertising Policy) அரசாணை எண். (4D)2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள். **05.06.2018**–ல் வெளியிடப்பட்டது.<br><br>**2.** விளம்பர பலகைகள் நிறுவ அமைதி வழங்குவது குறித்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் **(5–**வது திருத்தம்**)** சட்டம் **2018 (**தமிழ்நாடு சட்டம் **40/2018)** பிரிவு 285A, C.I, Schedule 0ல் திருத்தம் செய்யப்பட்டு மாதம் (IV)-பிரிவு **2–**ல் பிரசுரம் செய்யப்பட்டு **01.02.2019** முதல் அமலுக்கு கொண்டுவருவது சம்பந்தமாக அரசாணை எண். (MS) 15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1) நாள். **30.01.2019**–ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>**3.** தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பர பலகை அமைத்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் **2003–**க்கான விதி திருத்தங்கள் அரசாணை எண்.**17**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**31.01.2019**–ல் பாகம் II பிரிவு **2–**ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br><br>உள்ளாட்சிகளில் விளம்பரங்களை முறைபடுத்துவதற்கான நடைமுறைகள், அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் துணை விதிகள் ஏற்படுத்தி நடைமுறைபடுத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.**50000/–**திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் பதிவு செய்யலாம்<br>**2.** செலவினம் ரூ.**50000/–** திற்கு அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.** 6114/2011/எப்**1.** | **தீர்மானம் எண். 644**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>18.10.2019</td>
<td>

**4)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 04.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td></tr>
<tr><td colspan="6">குடிநீர் திட்ட நிதி</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள நீரேற்று நிலையங்களின் மோட்டார்களை பழுது மற்றும் பராமரிக்கும் பணி.</td><td rowspan="2">2,00,000/-</td><td>திரு. K. செந்தில், மயிலாடுதுறை.</td><td>ரூ.159629.00/– (–) 0.004% குறைவு</td><td rowspan="2">திரு. K. செந்தில், மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. E. கண்ணன், மயிலாடுதுறை..</td><td>ரூ. 159714.00/– (+) 0.049% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலககுறிப்பு</u>

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 004253/2019/இ1

</td>
<td>

**தீர்மானம் எண். 645**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 18.10.2019 | **5)** மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 04.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 646**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தார் சாலைகளை பழுது நீக்கம் செய்யும் பணி (Patch work) | **3,50,000/-** | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. | **ரூ.300225.70/– (–) 0.46%** குறைவு | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. |
| | | | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை.. | **ரூ. 303227.96/– (+) 0.53%** அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>

பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 004297/2019/இ1

<table>
<tr>
<td>18.10.2019</td>
<td>6) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.8, தியாகி நாராயணசாமி நகராட்சி மேல்நிலைப்பள்ளியின் மேற்கூரையின் ஓடுகள் சிதலமடைந்து மழைநீர் உள்ளே வருவதால் மாணவ மாணவர்களுக்கு சிரமநிலையும், ஆபத்தான நிலையிலும் உள்ளதால் உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மழைநீர் உள்புகாத வண்ணம் தார்பாய் கொண்டு கூரை வேய்திட தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) ஆகும். இப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி சட்டவிதி எண்.15ன் கீழ் இப்பணியினை நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு. K. செந்தில் அவர்களால் நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4846/2019/இ1</td>
<td>தீர்மானம் எண். 647<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>18.10.2019</td>
<td>7) நகர ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.4367/19/ந.ஊ.2. நாள்.24.09.2019–ல் உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க கூடுதல் அதிகாரம் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>கட்டிட பயன்பாடு</th><th>ஏற்கனவே உள்ள அதிகாரப்பகிர்வு</th><th>தற்போது வழங்கப்படும் மாற்றிய அதிகாரப்பகிர்வு</th></tr>
<tr><td>1</td><td>குடியிருப்பு</td><td>4000 சதுர அடி தரை பரப்பு வரை, 4 குடியிருப்புகள் வரை கொண்ட தரைதளம் மற்றும் முதல் தளம் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் இரண்டு தளங்கள்</td><td>7000 சதுர அடி தரை பரப்பு வரை, 8 குடியிருப்புகள் வரை கொண்ட 12மீ உயரத்திற்கு மிகாத தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் மூன்று தளங்கள்</td></tr>
<tr><td>2</td><td>வணிகம்</td><td>2000 சதுர அடி பரப்பளவுள்ள தரைதளம் மற்றும் முதல் தளம்</td><td>ஏற்கனவே உள்ள அதிகாரப்பகிர்வே தொடரும்.</td></tr>
</table>
உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகார பகிர்வு மாவட்ட ஆட்சித்தலைவர் நாளிதழ்கள் பொதுமக்கள் அறியும் வண்ணம் பிரசுரம் செய்திடல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடியிருப்பு கட்டிடத்திற்கு கூடுதல் அதிகார பகிர்வு அளிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கவும் அனுமதி வழங்கலாம்.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4538/2018/எப்1</td>
<td>தீர்மானம் எண். 648<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **18.10.2019** | **8)** இந்நகராட்சியில் ஆண்டுக்கணக்குகள் 2018–2019–ம் மற்றும் 2019–2020–ம் ஆண்டுகளுக்குரியது கணினியில் இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்து கணக்கினை முடித்து தணிக்கைத்துறைக்கு சமர்ப்பிக்கும்பொருட்டு கணினி இணைதளத்தில் பட்டய கணக்கர் மூலமாக பதிவேற்றம் செய்து கணக்கினை முடித்து கொடுக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டி அதற்கான உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50,000/– வீதம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1355/2019/பி1. | **தீர்மானம் எண். 649**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **18.10.2019** | 9) இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நகராட்சி பகுதிகளில் மூன்று இடங்களில் நுண்ணிய உரமாக்கும் பணிகளுக்கு பணிபுரியும் தூய்மை இந்திய பணியாளர்களின் பாதுகாப்புடன் பணிபுரிவதற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கு (மூன்று லட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 4763 /2019/எச்1 | **தீர்மானம் எண். 650**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **18.10.2019** | **10)** இந்நகராட்சி பொதுசுகாதாரம் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நகரப்பகுதியில் புதிதாக மூன்று MCC நுண் உயிரி மையம் உருவாக்கப்பட்டுள்து. மேற்படி மையத்திற்கு கொண்டு வரப்படும் மக்கும் குப்பைகள் உரமாக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் புதிதாக தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியாரால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் மூன்று MCC மையத்திற்கு (ஒரு மையத்திற்கு 6 நபர் வீதம்) 18 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கு (இரண்டு லட்சம்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4684/2019/எச்1 | **தீர்மானம் எண். 651**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |